பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 28 வெள்ளிக்கிழமை 13.08.2021 கதிர் 147

## வரதராஜப் பெருமாள் ஆலய மகோற்சவம் இடைநிறுத்தம்

**(இ.கலையமுதன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ஆவணி மகோற்சவத்தை இம்முறை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாப் ☞2

## நல்லூர் கந்தன் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்



**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோரின் பங்குபற்றுதலுடன் கொடியேற்ற நிகழ்வு ☞2

## நல்லூர் ஆலயத்துக்கு முன்னால் மக்கள் - பொலிஸார் வாக்குவாதம்



**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்னால் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் இன்று காலை முறுகல் நிலை ஏற்பட்டது.

நல்லூர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ☞2

# நாட்டை முற்றாக முடக்க கோட்டா மறுப்பு மாகாண முழுநேரப் பயணத்தடை அமுல்

### பொதுப்போக்குவரத்து இடைநிறுத்தம்



**இலங்கையில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரம் மற்றும் தாறுமாறாக எகிறும் மரணங்களை அடுத்து நாட்டை முற்றாக முடக்குமாறு சுகாதார நிபுணர்கள் முன்வைத்த வேண்டுகோளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடியோடு நிராகரித்துள்ளார்.**

**எனினும், இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்கும் இடையிலான பயணக் கட்டுப்பாட்டை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கொரோனாத் தடுப்புச் செயலணிக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.** ☞2

## நல்லூர் ஆலயத்துக்கு வருவதை தவிருங்கள்

### பொலிஸார் வேண்டுகோள்



**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

நாட்டின் தற்போதைய ஆபத்தான நிலைமை யில் நல்லூர் கந்தன் ஆலயத்துக்குள் செல்ல எவருக்கும் அனுமதி இல்லை. எனவே, ஆலயத்துக்கு வருவதைத் தவிருங்கள். ☞2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 64 பேர் சிக்கினார்கள்

கொழும்பு, ஒக. 14

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய மேலும் 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 54 ஆயிரத்து 100 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வீதி விபத்துக்களில் ஐவர் பலி; 50 இற்கும் மேற்பட்டோர் காயம்!

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



நாட்டில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 50 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் அதிக வேகத்துடன் பயணித்த பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 22 பேர் காயமடைந்துள்ளனர்.

கேகாலையில் ☞2




## கரைச்சி பிரதேச சபை ஊழியர் வீதியில் திடீரென வீழ்ந்து சாவு

கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபை ஊழியர் ஒருவர் இன்று பிற்பகல் திடீரென வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளமை அப்பகுதியில் பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

குறித்த ஊழியர் மதிய உணவுக்காகச் செல்வதாகப் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 47) என்ற வெளிக்களத் தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி நகரில் திருநகர் வீதியில் அரச நில அளவைத் திணைக்களத்துக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுகாதாரத்தரப்பினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் ☞2

## நாட்டை முற்றாக முடக்க கோட்டா மறுப்பு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தில் இன்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதற்கமைய இன்று நள்ளிவு முதல் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மாகாணங்களுக்கு இடையிலான முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி சுகாதாரம், துறைமுகம், சுற்றுலாத்துறை, ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடையவர்களுக்கு மாத்திரம் மாகாணங்களுக்கு இடையே பயணிக்க அனுமதி வழக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பொதுப்போக்குவரத்து சேவைகள் இன்று நள்ளிரவு முதல் நிறுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, செப்டெம்பர் 15 ஆம் திகதிக்குப் பின்னர் பொது இடங்களுக்குச் செல்வோரிடம் தடுப்பூசி போட்டுக்கொண்டமைக்கான அட்டை பரிசோதிக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## நல்லூர் கந்தன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

இதன்போது, ஆலயத்துக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் பக்தர்கள் ஒன்று கூடி நல்லூர் கந்தனை தரிசித்தனர்.

இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா 25 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

## நல்லூர் ஆலயத்துக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகுவதற்கு முன்னர் ஆலய வளாகத்துக்குள் செல்ல குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது.

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கருத்தில்கொண்டு சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்படி ஆலய முன்வாசலில் பொலிஸாரின் பஸ் நிறுத்தப்பட்டதுடன் ஆலய வளாகத்துக்குள் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதன்போது, கொடியேற்றநிகழ்வைப் பார்க்க ஆலயத்துக்குச் சென்றவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டபோது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் வீதியிலேயே தேங்காய்களை உடைத்த மக்கள், அங்கு கற்பூரங்களை எரிய வைத்து வழிப்பட்டனர்.

## வரதராஜப் பெருமாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மகோற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது எனப் பரிபாலன சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான ஆவணி மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் ஆலயத்துக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகியுள்ள நல்லூர் கந்தன் வருடாந்த மகோற்சவ பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 25 நாள்கள் வரை மகோற்சவம் நடைபெறவுள்ளது. தற்போது நாட்டில் கொரோனா நிலைமை மிகவும் தீவிரமாகக் காணப்படுகின்றது. தற்போதுள்ள கொரோனா தீவிர நிலையில் ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சால் சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தச் சுற்றிநிருபங்களுக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாநகர சபை, ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து ஆலய உற்சவத்தைப் பாதுகாப்பான முறையில் எவ்வாறு நடத்துவது தொடர்பில் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

அந்த முடிவின் பிரகாரம் நல்லூர் ஆலய வளாகத்துக்குள் ஆலய நிர்வாகத்தினரால் அனுமதி அட்டை வழங்கப்பட்டோர் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். வேறு எவரும் ஆலய வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எனவே, பொதுமக்கள் தற்போதுள்ள தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு ஆலயத்துக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். வீடுகளில் இருந்தவாறு நேரடியாக ஒளிபரப்பப்படும் ஆலய உற்சவத்தைத் தரிசியுங்கள். அவ்வாறு தரிசிப்பதன் மூலம் தொற்று நிலைமையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

தற்போது நாட்டில் கொரோனா பரவல் நிலைமை தீவிரமாகக் காணப்படுகின்றது. அந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் பாதுகாப்புக்காக இந்த ஏற்பாட்டை செய்துள்ளோம் - என்றார்.

## வீதி விபத்துக்களில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற பஸ் விபத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பொல்கஹவெல பகுதியில் 5 டிப்பர் வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்ட விபத்தில் பௌத்த பிக்கு ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

ஏனைய இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களின்போது 4 பேர் உயிரிழந்ததுடன் 21 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

பல விபத்துக்கள் இடம்பெறுவதன் காரணமாக எந்தத் தருணத்திலும் வீதிப் பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுகின்றோம் - என்றார்.

## கரைச்சி பிரதேச சபை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளது.

சடலம், பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com


## தகிக்கப் போகும் நாடு

20ஆவது அரசமைப்புத் திருத்தம் நாட்டுக்கு என்ன செய்திருக்கிறது?

2019 ஜனாதிபதித் தேர்தலில் அளப்பரிய வெற்றியையும், அதன் பின்னர் 2020 பொதுத் தேர்தலில் வரலாற்றில் முன்பின் இல்லாதவாறு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கியதன் மூலம் இலங்கை மக்கள் எதைச் சாதித்திருக்கின்றார்கள்?

நாட்டின் இன்றைய அவல நிலைமையை ஒட்டி ஒவ்வொரு இலங்கை வாக்காளரும் தன்னைத்தானே கேட்க வேண்டிய கேள்விகள் இவைதான்.

“வல்லமை (அதிகாரம்) கெடுக்கும் போக்குடையது. முழுமையான வல்லமையும் முழுமையாக சிதைத்துவிடும்” என்றார் சரித்திர ஆசிரியர் அக்டோன் பிரபு.

அவர் கூறியமையை இன்று இலங்கை எதிர்கொண்டிருப்பதுதான் நமது துரதிஷ்டம்.

2019 பொதுத் தேர்தல் சமயம் தென்னிலங்கை மக்கள் கோட்டாபய ராஜபக்ஷ குறித்துக் கொண்டிருந்த மனப்படிவம் வேறு. இன்று அவர்கள் மனதில் அவர் குறித்து கொந்தளிக்கும் ஆவேஷம் வேறு.

அவர் மோசஸ் போல இலங்கை மக்களை நெறிப்படுத்த வரும் புதிய வழிகாட்டி – மேய்ப்பன் – என்றுதான் அப்போதும் தென்னிலங்கை மக்கள் நம்பினார்கள்.

நீதி முறைமையைச் சாகடித்து, வெள்ளை வான் கலாசாரத்தை நாட்டில் கட்டவிழ்த்து விட்டு, அடிப்படை மனித உரிமைகளைக் காற்றில் பறக்கவிட்டு, ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் மூழ்கிக்கிடந்த முன்னைய ராஜபக்ஷக்களின் அதிகார பீடத்தின் மூல வேராக இருந்தவர் அவர். எனினும் ‘புலிப் பயங்கரவாதத்தை’ ஒழிப்பதற்கான அரச பயங்கரவாதமாக’ அதை ஏற்று அங்கீகரித்து, அந்தக் கொடூரங்களை எப்பாடுபட்டேனும் மூடி மறைக்க வேண்டும் என்று பௌத்த, சிங்களப் பேரினவாதத்தில் ஒற்றைக்காலில் நின்றது தென்னிலங்கை.

சிறுபான்மையினருக்கு எதிரான பெரும் யுத்தக் குற்றங்கள் கூட பௌத்த, சிங்களப் பேரினவாத நியாயப்பாடுகளின் கீழ் மூடி மறைக்கப்படவேண்டும் என்ற இலங்கையின் பௌத்த – சிங்கள ‘பஞ்சசீலக் கொள்கைப்படி’ அந்தக் கொடூரங்களை மூடி மறைப்பதற்கான போர்வையாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பெரு வெற்றியை அவருக்கு வழங்கியது தென்னிலங்கை.

கொடூரங்கள், பேரழிவுகள், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள், அட்டூழியங்கள், அட்டகாசங்கள் போன்ற இன்னோரன்ன தவறுகள் எல்லாம் சிறுபான்மையினருக்கு எதிராக இழைக்கப்பட்ட போதும் அவையெல்லாம் பௌத்த, சிங்கள பேரினவாத போக்கில் சரியானவை என்று கருதியது தென்னிலங்கை. அதனால் அத்தனை கொடூரங்களுக்கும், குரூரங்களுக்கும், குற்றங்களுக்கும் காரணமானவர்களை நாட்டின் ஆபத் பாந்தவர்கள் என்று கணக்குப் போட்டது பேரினவாதச் சிந்தையில் மூழ்க்கிடக்கும் தென்னிலங்கை.

இப்போது அதன் விளைவை அந்தப் பேரினவாதச் சிந்தனை போக்கை பெரும்பான்மையாகக் கொண்ட தென்னிலங்கையும் சேர்ந்து அனுபவிக்கும் பரிதாப நிலைமை.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாட்டின் முழு அதிகாரமும் – முற்றுமுழுதான வல்லமையும் – ஒரு குடும்பத்தில் சிக்கிக் கிடக்கும் அவல நிலைமை. அதன் பெறுபேறு என்ன?

அரச நிர்வாகம் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி, ஒட்டுமொத்தத்தில் ஜனநாயக ஆட்சி முறை நிர்வாகம் எல்லாமே சாக்கடைக்குள் என்றாகிவிட்டது. ஜனநாயகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே ஜனநாயக ஆட்சி முறைமையைக் குழிதோண்டிப் புதைக்கும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு துணைபோன அவலத்தை நாடு சந்தித்தது.

‘அதிகாரம் (நாட்டை) சிதைக்கும். முழு அதிகாரம் முற்றாக சிதைக்கும்’ என்ற அக்டன் பிரபுவின் கூற்று உலகெங்கனும் பல தடவைகள் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது. அது மீண்டும் ஒரு தடவை இலங்கையில் நிரூபணமாகிக் கொண்டிருக்கின்றது.

மோசடி, ஊழல் மற்றும் கொடூரக் குற்றமிழைத்தோருக்குத் தண்டனை விலக்களிப்பு, சட்டத்தின் ஆட்சிக்கு சாவு மணி என்ற ஜனநாயக விரோத முறைமைகள் முழு அளவில் நிலைபெற்று, இப்போது அதையும் தாண்டி, மீண்டும் ‘அரச பயங்கரவாதம்’ முழு அளவில் தனது கைவரிசையைக் காட்டக் கூடிய சூழல் உருவாகி வருகின்றது என்பதுதான் மிகவும் திகிலூட்டும் நிலைமையாகும்.

சிவில் உடையில் வரும் பொலிஸார் எனக் கூறப்படுவோர் சட்டத்திற்கு முரணாக ஆள்களை கடத்திச் செல்வதும், அதை நியாயமான செயற்பாடாக அரசு நிர்வாகம் பார்த்திருப்பதும் வெள்ளை வான் கடத்தல்கள் மீண்டும் உச்சம் பெறுவதற்கான ஆரம்ப புள்ளிதான்.

அதில் தாம் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை சட்டத்தின் பிடியில் சிக்காமல் வெற்றிகரமாக நிரூபித்து காட்டியோரின் கைகளில்தான் இப்போது அதிகாரம் – முழு அதிகாரம் – மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அது மீளவும் முழு அளவில் அரங்கேறப் போகிறது. அதனைச் சகிக்க முடியாமல் நாடு தகிக்கப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# கொழும்பில் தடுப்பூசி பெறாத ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர்!

## கணக்கெடுப்பில் வெளியான தகவல்

கொழும்பு மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் இன்னும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவில்லை என்று கொழும்பு பிரதேச செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தின் 557 கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய யசரத்ன, தடுப்பூசி போடப்படாத இந்த பெரியவர்களை அடையாளம் கண்டு, தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். 30 வயதுக்கு மேற்பட்ட 13 லட்சத்து 34 ஆயிரத்து 947 பேர் கொழும்பு மாவட்டத்தில் வசிக்கின்றனர். அவர்களில் 90 வீதத்துக்கும் அதிகமானோர் தடுப்பூசிகளை பெற்றுள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட தடுப்பூசி போடப்படாதவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மற்றும் கொலன்னாவ பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்று யசரத்ன குறிப்பிட்டார்.

சுகாதார அதிகாரிகள் இந்த வாரத்திற்குள் 46 ஆயிரத்து 672 சிரேஷ்ட குடிமக்களுக்கு தடுப்பூசிகளை செலுத்த எதிர்பார்க்கிறார்கள் என்றும் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரட்ன தெரிவித்துள்ளார்.

# உலகம் வெப்பமயமாதல் இலங்கைக்குப் பாதிப்பு!

உலக வெப்பமயமாதலால் இலங்கைக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

உலகம் வெப்பமாதலால் தீவுகளுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உலகம் வெப்பமயமாதல் கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உலகம் வெப்பமாதலால் மழை வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பல்வேறு காலநிலை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய அபாயங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பு அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள காலநிலை குறித்த அறிக்கையொன்றை மேற்கோள்காட்டி அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் தேங்கிய 26 சடலங்கள் மட்டக்களப்பில் அடக்கம்

கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் தேங்கியிருந்த 26 சடலங்கள் மட்டக்களப்பு ஓட்டுமாவடி சூடுபத்தினசேனையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவிக்கும்போதே ஓட்டுமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌவ்பர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர் -

கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரேத அறையில் தேங்கியிருந்த 40 சடலங்களை மட்டக்களப்பு ஓட்டுமாவடியில் கொரோனா சடலங்களை அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்யுமாறு கொழும்பு மாளிகாவத்தை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஓட்டுமாவடிக்கு 26 சடலங்கள் கொண்டுவரப்பட்டமையையடுத்து அவற்றை இரு கிடங்குகளில் பரப்பப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை கொரோனாவால் உயிரிழந்த 1,537 பேரின் சடலங்கள் இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ளமையுடன் தொடர்ந்து அதிகளவான சடலங்கள் வருவதால் அதனைப் புதைப்பதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த இடப்பற்றாக்குறை தொடர்பாக கடந்த சில தினங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உட்பட அரசியல்வாதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். இந்தப் பகுதியில் எதிர்வரும் சிலநாள்களின் பின்னர் சடலங்கள் அடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்படும். - என அவர் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

# காணி மற்றும் வீட்டு உறுதிப்பத்திரம் பெறுவதற்கு இணையம் ஊடாக வசதி

*இலங்கையில் எதிர்காலத்தில் காணி மற்றும் வீட்டு உறுதிப் பத்திரங்கள் மற்றும் டைட்டில் ரிப்போர்ட் என்ற அவற்றின் உரிமை அறிக்கைகள் என்பன, இணையங்களில் கிடைக்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.*

*இலங்கையர்களும் விரைவில் தங்கள் உறுதிப்பத்திரங்கள் மற்றும் உரிமை அறிக்கைகளின் நகல்களை, இணையங்களின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்று பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.*

*தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமை அமைச்சகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் திணைக்களத்தின், இந்தத் திட்டம் 2021, ஒகஸ்ட் 2ஆம் திகதி நடைமுறைக்கு வந்துள்ளதாக கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.*

*பொதுமக்கள் சான்றிதழ்களை ஸ்பீட் போஸ்ட் என்ற விரைவு அஞ்சல் மூலமாகவோ அல்லது அருகில் உள்ள பிரதேச செயலகத்திலோ சேகரிக்கலாம். பொதுமக்கள் இணைய இணைப்பைப் பயன்படுத்தி சான்றிதழைப் பெறுவதற்கான நடைமுறையைப் பின்பற்றலாம்.*

*இதேவேளை பொது அதிகாரபூர்வ இணையதளம் மூலமாகவோ அல்லது 011 288 9518 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களைப் பெறலாம் என்று பதிவாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது.*

# இந்தியாவில் இருந்து அமீரகம் பயணிப்பதற்கு தடுப்பூசிச் சான்றிதழ் கட்டாயம் கிடையாதாம்

## ஏயர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் தகவல்





இந்தியாவில் இருந்து டுபாய்க்கு வருகை புரியும் விமானப் பயணிகளில் டுபாய் விசா பெற்றுள்ளவர்கள் கட்டாயம் குடியிருப்பு மற்றும் வெளிநாட்டவர் விவகார பொது இயக்குநகரத்தின் (ஜி.டி.ஆர்.எப்.ஏ) https://smart.gdrfad.gov.ae/SmartOTCServicesPortal/ReturnPermitService.aspx என்ற இணையதள முகவரியில் நுழைவுக்கான அனுமதியை பெற்று இருக்க வேண்டும். துபாயை தவிர்த்து மற்ற பகுதிகளில் விசா பெற்று அமீரகத்துக்குள் வருகை புரியும் விமான பயணிகள் கட்டாயம் மத்திய அடையாளம் மற்றும் குடியுரிமை ஆணையத்தின் (ஐ.சி.ஏ) https://smartservices.ica.gov.ae/echannels/web/client/guest/index.html/registerArrivals என்ற இணையதளத்தில் பதிவு செய்து முன் அனுமதி பெற வேண்டும். இதில் எக்ஸ்போ 2020 உலக கண்காட்சிக்கு வருகைதரும் அமைப்பாளர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு மேற்கண்ட அரசுத்துறைகளிடம் இருந்து முன் அனுமதி பெறத் தேவையில்லை.

இந்தியாவில் இருந்து வரும் பயணிகள் தாங்கள் வசிக்கும் பகுதியில் பயண நேரத்திற்கு 48 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட கொரோனா பரிசோதனை முடிவுகளை க்யூ.ஆர் கோட் சான்றிதழுடன் எடுத்து வர வேண்டும். இந்திய விமான நிலையங்களில் எடுக்கப்படும் ரேபிட் கொரோனா பரிசோதனை முடிவுகளையும் கையில் வைத்திருக்க வேண்டும்.

அபுதாபி, ராசல் கைமா பகுதிகளுக்கு வருகை புரிபவர்கள் கட்டாயம் முறையே 12 மற்றும் 10 நாள்கள் கட்டாய தனிமைப்படுத்துதலுக்கு உட்பட வேண்டும். ராசல் கைமாவிற்கு வருகை புரிந்த 41வது மற்றும் 81ஆவது நாளிலும், அபுதாபிக்கு வருகை புரிந்த 61ஆவது மற்றும் 111ஆவது நாளிலும் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இதில் தற்போதைய விதிமுறைகளின்படி கொரோனா தடுப்பூசி குறித்த ஆவணங்கள் எதுவும் கட்டாயம் என குறிப்பிடவில்லை. எனவே இந்திய விமான நிலையங்களில் புறப்பாடு பகுதியில் தடுப்பூசி நிலை குறித்து பரிசோதனை செய்யப்படுவது இல்லை. மேற்கண்ட முக்கிய அனுமதி மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை குறித்த ஆவணங்கள் மட்டும் கட்டாயம் பெற்று இருக்க வேண்டும்.

# கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து மீண்டும் விசாரணை; சீனா நிராகரிப்பு



கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து மேலும் விசாரிக்க உலக சுகாதார நிறுவனம் முன்மொழிந்த திட்டத்தை சீனா நிராகரித்துள்ளது. இது முற்றிலும் தேவையற்றது எனவும் சீனா தெரிவித்துள்ளது.

உலகை உலுக்கி வரும் கொரோனா வைரஸ் முதன் முதலாக சீனாவின் உகான் நகரில்தான் கண்டறியப்பட்டது. உகான் நகரில் உள்ள ஆய்வுக்கூடத்தில் இருந்து வைரஸ் பரவியிருக்கலாம் என்று அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் சந்தேகம் எழுப்பின.

இதனால், உலக சுகாதார அமைப்பு குழு ஒன்று அமைத்தது. வைரஸின் பிறப்பிடம் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட இந்தக் குழு சீனாவிலும் ஆய்வு மேற்கொண்டது. முதல் கட்ட விசாரணையில் சீன ஆய்வகத்தில் இருந்து கொரோனா பரவவில்லை என தெரிய வந்தது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இவ்விவகாரம் குறித்து மீண்டும் விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை கொரோனா வைரஸின் பாதிப்பு குறித்த மூல தரவுகளை பகிருமாறு சீனாவை உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தியது. ஆனால் இதை நிராகரித்த சீனா, இந்த திட்டம் அரசியல் சார்ந்தது எனவே அதை ஒப்புக்கொள்ள மாட்டோம் என சீனா தெரிவித்துள்ளது.




# இங்கிலாந்தில் பிளைமவுத் நகரில் துப்பாக்கிச் சூடு; 6 பேர் உயிரிழப்பு

தென்மேற்கு இங்கிலாந்தின் பிளைமவுத் நகரில் நேற்று மாலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் பல பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக உள்துறை செயலாளர் தெரிவித்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் வரை கொல்லப்பட்டனர் என டைம்ஸ் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என தி டெய்லி டெலிகிராப் கூறியது. அவர் தற்கொலை செய்தாரா அல்லது பொலிஸாரால் சுடப்பட்டாரா என்பது குறித்த உறுதியான தகவல் வெளியாகவில்லை.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை பொலிஸார் இதுவரை உறுதிப்படுத்தவில்லை, ஆனால் நிலைமை கட்டுக்குள் இருப்பதாக நம்பப்படுகிறது.

# பாகிஸ்தானில் விபத்துக்குள்ளான பஸ் தொடர்பாக பின்னணியில் ‘றோ’ அமைப்பு எனக் குற்றச்சாட்டு

பாகிஸ்தானின் பகதுன்க்வா மாகாணத்தில் புதிதாக தாசு தாம் என்ற அணைக் கட்டும் பணி நடந்து வருகிறது. இதில் ஈடுபட்டு வரும் சீனப் பொறியியலாளர்கள் மற்றும் இராணுவத்தினரை அங்கிருந்து ஏற்றிக்கொண்டு கடந்த 14ஆம் திகதி பஸ் சென்றபோது, திடீரென குண்டு வெடித்து பஸ் பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் 9 சீன பொறியியலாளர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

வெடிகுண்டு தாக்குதல் காரணமாக, பஸ் விபத்து ஏற்பட்டதாக பாகிஸ்தான் குற்றம்சாட்டியது. விபத்தை அடுத்து, சீன விசாரணை அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு விரைந்து வந்து, சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டு விசாரணையை துரிதப்படுத்தினா.

விசாரணை முடிவடைந்த நிலையில், பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது குரேஷி செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், பஸ்ஸின் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானில் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் ஆப்கானிஸ்தானில் இருந்து கடத்தப்பட்டது. இந்த தாக்குதலின் பின்னணியில் இந்தியாவின் ‘ரா’ உளவு அமைப்பும் ஆப்கானிஸ்தானின் தேசியப் பாதுகாப்பு இயக்குநரகமும் (என்.டி.எஸ்.) உள்ளன. அந்த இரு அமைப்புகளுக்கு இடையே ரகசியத் தொடர்பு உள்ளது என்றார்.



கண்ணீர் அஞ்சலி



அமரர்
கோணலிங்கம் கருணானந்தராசா

சிறந்த சமூக சேவையாளரும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளருமான கோணலிங்கம் கருணானந்தராசாவின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு பருத்தித்துறை நகரசபை சார்பாக ஆறுதல் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள்,
பருத்தித்துறை நகரசபை.

# நிறுவனமொன்று தனது வியாபாரத்துக்காக எங்கள் அரசியலை வரையறுக்கின்றது!

## டுவிட்டர் மீது ராகுல் காந்தி குற்றச்சாட்டு



டெல்லியில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சிறுமியின் பெற்றோருடைய படத்தை காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி தனது 'டுவிட்டர்' பக்கத்தில் வெளியிட்டார். அதனால் அவரது பக்கத்தை 'டுவிட்டர்' நிறுவனம்முடக்கியது. இதைத்தொடர்ந்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ 'டுவிட்டர்' பக்கமும் முடக்கப்பட்டுள்ளது. இதை காங்கிரஸ் கட்சி தனது 'பேஸ்புக்' பக்கத்தில் தெரிவித்தது.

இந்த நிலையில் காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி டுவிட்டரின் ஆபத்தான விளையாட்டு என்ற தலைப்பில் யூடியூப்பில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், என்னுடைய டுவிட்டர் கணக்கை முடக்கியதன் மூலம் டுவிட்டர் நிறுவனம் எங்களின் அரசியல் செயல்பாட்டில்தலையிட்டுள்ளது. ஒருநிறுவனம் தனது வியாபாரத்தை செய்வதற்காக எங்கள் அரசியலை வரையறுக்கிறது. ஓர் அரசியல் தலைவராக இதை நான் ஏற்கவில்லை. இது இந்திய ஜனநாயகக் கட்டமைப்பின் மீதான தாக்குதலாகவே பார்க்கிறேன்.

எங்களின் ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகிவருகிறது. நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பேச அனுமதியில்லை. ஊடகத்துக்குக் கட்டுப்பாடுகள் உள்ளன.

ஆனால், டுவிட்டர் மூலம் நாம் நினைத்த கருத்தை முன்வைக்கலாம், அந்த நம்பிக்கை ஒளிக்கீற்று இருக்கிறது என நான் நினைத்தேன். ஆனால், உண்மையில் டுவிட்டர் நிறுவனம் முழுமையாக நடுநிலையானது அல்ல எனத் தெரிந்துள்ளது. இது ஒருதரப்பான தளம். ஆட்சியில் இருக்கும் அரசு என்ன சொல்கிறதோ அதைத்தான் இது கேட்கிறது என்று தெரிவித்துள்ளார்.



## 3 மணி நேர பட்ஜெட் உரையை நிறைவு செய்தார் தமிழக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடரில் 3 மணி நேர பட்ஜெட் உரையை நிறைவு செய்தார் நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்.

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர், பேரவைத் தலைவர் அப்பாவு தலைமையில் இன்று காலை தொடங்கியது. தமிழக சட்டப் பேரவை வரலாற்றில் முதல் முறையாக காகிதமில்லாத நிதிநிலை அறிக்கை இன்று காலை 10 மணிக்கு தாக்கல் செய்யப்பட்டது. முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் முதல் நிதிநிலை அறிக்கை இதுவாகும்.

கூட்டத் தொடரில் 2021-22 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்து உரையாற்றினார். காலை 10 மணிக்குத் தொடங்கி சரியாக பிற்பகல் 1.02 இற்கு அவர் நிறைவு செய்தார்.

திருக்குறளோடு தனது உரையைத் தொடங்கி பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோருக்கு புகழாரம் சூட்டி, தொடர்ந்தார். அதுபோல இறுதியாக முன்னாள் நிதியமைச்சர்களை நினைவு கூர்ந்த அவர், நிதிநிலை அறிக்கையை தயார் செய்ய உதவிய தற்போதைய நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் மற்றும் இதர நிதித்துறை பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தனக்கு இந்த மாபெரும் பொறுப்பை வழங்கிய முதல்வருக்கும் நன்றி தெரிவித்தார். இதன்பின்னர் அவையை ஒத்திவைப்பதாக தெரிவித்த பேரவைத் தலைவர் அப்பாவு, மீண்டும் நாளை காலை 10 மணிக்கு பேரவை கூடும் என்று தெரிவித்தார்.

## இந்தியாவின் தொழில் உற்பத்தி 13.6 சதவீதத்தினால் அதிகரிப்பு



கடந்த ஜூன் மாதத்தில், இந்தியாவின் தொழில் உற்பத்தி 13.6 சதவீதம் அதிகரித்துள்ளது. உற்பத்தித் துறை, சுரங்கம், மின்சாரம் ஆகிய துறைகளில் உற்பத்தி கணிசமாக உயர்ந்ததுதான் இதற்குக் காரணம் என்று இந்திய தேசிய புள்ளியியல் அலுவலகம் கூறியுள்ளது.

இது தொடர்பாக இந்திய தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்.எஸ்.ஓ.) நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் தொழில்துறை உற்பத்தி (ஐ.ஐ.பி.) சென்ற ஜூன் மாதத்தில் 13.6 சதவீத வளாச்சியை பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு இதே ஜூன் மாதத்தில் உற்பத்தி அளவு 16.6 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தது.

அதன்படி, 2021 ஜூனில் தயாரிப்புத் துறையின் உற்பத்தி 13 சதவீத வளாச்சியைக் கண்டுள்ளது. அதேபோன்று, சுரங்கத் துறையின் உற்பத்தியும் 23.1 சதவீதம் உயர்ந்துள்ளது. மின்சாரத் துறையின் உற்பத்தி ஜூனில் 8.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. நடப்பாண்டின் ஏப்ரல்-ஜூன் வரையிலான மூன்று மாதக் காலத்தில் ஐ.ஐ.பி. 45 சதவீதம் வளாச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலாண்டில் இத்துறையின் வளாச்சி 35.6 சதவீதம் பின்னடைந்திருந்தது. கொரோனா பேரிடரால் கடந்தாண்டு மார்ச் மாதத்தில் தொழிலக உற்பத்தி 18.7 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சி 2020 ஏப்ரலில் 57.3 சதவீதமானது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் 40,120 பேருக்கு கொரோனாத் தொற்று

இந்தியாவில் கொரோனாத் தொற்றின் இரண்டாவது அலை ஓய்ந்து வந்த நிலையில், இந்த மாத தொடக்கத்தில் இருந்து தினசரி பாதிப்பு சற்றே ஏறுமுகம் கண்டு வருகிறது. அவ்வப்போது இது சிறிது வீழ்ச்சியடைந்தாலும் மீண்டும் உயர்வடைவதில் மாற்றமேற்படவில்லை.

இந்த நிலையில், இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 40 ஆயிரத்து 120 பேருக்கு தொற்றுப் பாதிப்பு உறுதியாகி உள்ளது. இதன் மூலம் மொத்தக் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3,21,17,826 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், தொற்று பாதிப்புகளுக்கு ஒரே நாளில் 585 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4,30,254 ஆகவும் உயிரிழந்தோர் விகிதம்1.34% ஆகவும் கணிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவில் இதுவரை 52,95,82,956 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.



## தி.மு.க. பொய்யான வாக்குறுதிகளால் மக்களை ஏமாந்நிவிட்டது முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி குந்நச்சாட்டு



தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இன்று சட்டப் பேரவையில் தமிழக அரசின் 2021-22 நிதியாண்டுக்கான முழுமையான திருத்திய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காகிதமில்லா பட்ஜெட்டை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வாசிக்க தொடங்கியதும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டனர். அதன்பின்னர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

வெளியே வந்து செய்தியாளர்களைச் சந்தித்த முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, சட்டசபைத் தேர்தலின் போது 500 இற்கும் மேற்பட்ட நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை தி.மு.க. அளித்தது.

ஆட்சிக்கு வந்தவுடன் போடப்போகும் முதல் கையெழுத்தே நீட் தேர்வு ரத்து என்பதுதான் எனக்கூறிவிட்டு ஆட்சிக்கு வந்து 100 நாள்கள் ஆகும் நிலையில், நீட் தேர்வை ரத்துச் செய்ய முடியாமல் மாணவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நடைமுறைப்படுத்த முடியாத தேர்தல் வாக்குறுதிகளை அளித்து தி.மு.க. மக்களை ஏமாற்றிவிட்டது. வெள்ளை அறிக்கையின்போது உண்மைக்குப் புறம்பான தகவலை நிதியமைச்சர் வெளியிட்டு இருக்கிறார். வாக்குறுதி அளித்துவிட்டு நீட் தேர்வை ரத்து செய்யாத தி.மு.க. அரசுக்கு கண்டனத்தைத் தெரிவித்து கொள்கிறேன். அ.தி.மு.கவினர் மீது பொய் வழக்குகளைப் போடுவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். பொய் வழக்குகளைக் கண்டு அ.தி.மு.க. அஞ்சாது. நமது அம்மா பத்திரிகை அலுவலகத்தில் சோதனை என்ற பெயரில் ஒரு நாள் பத்திரிகையை வெளியிட முடியாமல் தடுத்ததற்காகவும் பத்திரிகைச் சுதந்திரத்தை காலில் போட்டு நசுக்கும் தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து வெளிநடப்பு செய்துள்ளோம் என்று தெரிவித்திருக்கிறார்.




# மாகாண எல்லைகளில் பொலிஸாரும் மேலதிகமாக முப்படையினரும் குவிப்பு

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண எல்லைகளில் பொலிஸாரும் மேலதிகமாக முப்படையினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவிக்கின்றார்.

பொலிஸாரின் ஒத்துழைப்புக்கு முப்படையினர்தேவையெனகருதப்படும்இடங்களில் முப்படையினர் நேற்று முதல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறுகின்றார்.

நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமைக்கு மத்தியில், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு மீண்டும் கடுமையாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# காஞ்சிரங்குடாவில் சிறுமி தற்கொலை

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட சில்லிக்குடிஆறு காஞ்சிரங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியான பாக்கியராசா மாலினி என்பவர் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் இன்று இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது–

கடந்தசிலமாதங்களுக்கு முன்னர் குறித்த யுவதியின் தாயார்மரணமடைந்திருந்தார் எனவும், தான் தனது தாயை இழந்துள்ளேன் எனவும் அதனால் தானும் தற்கொலை செய்யப்போகிறேன் என நீண்ட நாள்களாக கூறிவந்த நிலையில் அவரின் வீட்டு அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் இன்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸாரும் வருகை தந்து விசாரணைகளை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது




# மட்டக்களப்பு கொவிட் நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைப்பு

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டம் உள்ளடங்கலாக 9 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பராமரிப்பு இல்லங்களுக்கும், கொவிட் 19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையத்திற்கும், வறுமைக்கோட்டிற்குட்பட்ட தனது பயனாளிகள் குடும்பங்களுக்கும் மாவட்ட செயலகங்கள் மற்றும் அரச திணைக்களங்களுடன் இணைந்து உதவித் திட்டங்களை பெரண்டினா நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இச்செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின்கீழ் இயங்கி வரும் கரடியனாறு மற்றும் வாகரை கொவிட் 19 சிகிச்சை மற்றும் பராமரிப்பு நிலையங்களிற்கு உடனடி தேவையான ரூபா 7 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான மருத்துவ மற்றும் மருத்துவம் சாரா உபகரணங்கள் பெரண்டினா நிறுவனத்தினால் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# திருக்கோவிலில் மண் அகழ்வு; குடியிருப்பாளர்கள் பாதிப்பு



அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் தற்போது இடம் பெற்று வரும் பாரியளவிலான ஆற்று மண் அகழ்வினால் விவசாயப் பாதைகள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாதசாரிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்து வருகின்றன. இவ் விடயம் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இன்று இடம்பெற்று இருந்தது.

இதன்போது விவசாய அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்க நிருவாகிகள், மீனவர் சங்க அமைப்புக்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள் ஆகியோரும் அரச துறைசார் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பிரதேசத்தில் இருந்து சுமார் 4 கி.மீற்றர் தூரத்திற்கு ஆற்று மணல் அகழ்வுக்காக உத்தேசிக்கப்பட்டு மூன்று நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டு மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இங்கு இடம்பெறும் பாரிய மணல் அகழ்வின் ஊடாக திருக்கோவில் பிரதேச மக்களின் மண் வளம் அழிந்து போவதுடன் பிரதேச மக்கள் தமக்கான மணலை அதிக விலை கொடுத்தே பெற்று வருகின்றனர்.

இதேவேளை விவசாயப் பாதைகள் சேதமடைவதோடு கனரக வாகனங்கள் அதிக வேகத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக செல்லும் போது விபத்துக்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் காணப்படுவதோடு புழுதி காரணமாக இங்கு வாழும் மக்களுக்கு சுவாச நோய்களும் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என மேற்படி அமைப்புக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு இருந்தன.

இந்நிலையில் இவ் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்ட பின்னர் மண் அகழ்வுக்கான வேலைகளை முன்னெடுக்குமாறு திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனிடம் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இவ் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரதேச செயலக அதிகாரிகள், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர், தம்பிலுவில் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், தம்பிலுவில் கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வன பரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்ததுடன் மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளில் ஒருசிலவற்றுக்கு தீர்வுகளும் எட்டப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் வியாபாரிகள் இருவர் காத்தான்குடியில் கைது

மிக நீண்டகால போதைப்பொருள் வியாபாரியும், போதைப்பொருள் விற்பனைக்குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்தவருமான காத்தான்குடியைச்சேர்ந்த 57 வயதுடைய பிரபல போதைப்பொருள் வியாபாரியும், 46 வயதுடைய ஒருவரும் நேற்றிரவு 11மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார். ஹொஸ்டல் வீதி, 3ஆம்குறுக்குத்தெரு, காத்தான்குடிஎனும்முகவரியிலுள்ள வீட்டில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து 2 கிலோ 50 கிராம் கேரள கஞ்சாவும் கஞ்சா கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 57 வயதுடைய பிரபல போதைப்பொருள் வியாபாரி பல முறை சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்பதுடன், இவர் ஓட்டமாவடி, வாழைச்சேனை தொடக்கம் ஏறாவூர், காத்தான்குடி வரை கேரளா கஞ்சா மற்றும் போதைப்பொருள் ஏக விநியோகஸ்தராகச் செயற்பட்டு வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மட்டக்களப்பு மாவட்ட தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர்.



# யு.இ.எவ்.ஏ. சூப்பர் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் பெனால்டி ஷூட் அவுட் மூலம் செல்சி அணி சம்பியன்






யு.இ.எவ்.ஏ. சூப்பர் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் செல்சி அணி 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் 6-5 என்ற கோல் கணக்கில் வில்லாரியலை வீழ்த்தி சம்பியன் ஆனது. கடந்த மே மாதம் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் மன்செஸ்டா சிட்டியை வீழ்த்தி பட்டம் வென்ற 10 வாரங்களுக்குள்ளாக இந்தக் கிண்ணத்தையும் வென்றிருக்கிறது செல்சி.

இந்த இறுதி ஆட்டத்தில் பின்பகுதியில் மாற்று வீரராகக் களமிறக்கப்பட்ட செல்சி கோல்கீப்பா கெபா ஆரிஸபலகா, அணியின் புதிய கதாநாயகன் ஆகியிருக்கிறார். பெனால்டி ஷூட் அவுட்டில் சரிக்கு சமமாக நீடித்த ஆட்டத்தில், வில்லாரியலின் கடைசி வாய்ப்பை கோலாக விடாமல் தடுத்து அணியின் வெற்றியை உறுதி செய்திருக்கிறார் கெபா.

ஆட்ட நேரத்தைத் தொடர்ந்து கூடுதல் நேரத்துக்குப் பிறகும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலை நீடித்திருக்க, 119 ஆவது நிமிடத்தில் களம் புகுந்தா கெபா. பிரதான கோல்கீப்பா எட்வாட் மெண்டியைக் காட்டிலும் பெனால்டி கிக்குகளைத் தடுப்பதில் கெபா கெட்டிக்காரர் என்று அணியின் புள்ளிவிவர நிபுணர்கள் அளித்த தகவலின் பேரில் பயிற்சியாளர் தாமஸ் துலின் அவரைக் களமிறக்கினார். அந்தக் கடைசி நேர நகர்வுக்கு உரிய பலனும் கிடைத்தது. வில்லாரியலின் முக்கியமான கடைசி பெனால்டி வாய்ப்பைத் தடுத்து அணியின் வெற்றியை கெபா உறுதி செய்ய, பாய்ந்து சென்று அவரை முதலில் பாராட்டியவர் பிரதான கோல்கீப்பா எட்வாட் மெண்டியே.

இந்த ஆட்டத்தில் முதலில் செல்சி அணிக்காக ஹக்கிம் ஸியெச் 27 ஆவது நிமிடத்தில் கோலடிக்க, முன்னிலையை முதல் பாதியில் தக்க வைத்திருந்தது அந்த அணி. ஆனால், 2 ஆவது பாதியில் 73 ஆவது நிமிடத்தில் ஜெரார்ட் மொரினோ அடித்த கோலால் ஆட்டம் சமன் ஆனது. எஞ்சிய நேரத்திலும், கூடுதல் நேரத்திலும் இரு அணிகளின் கோல் முயற்சிகளுக்கும் பலன் கிடைக்காமல் போனதால், வெற்றியாளரைத் தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கையாளப்பட்டது.

பெனால்டி ஷூட் அவுட்பெனால்டி ஷூட் அவுட்டில் முதல் வாய்ப்பில் கோலடிக்கத் தவறிய செல்சி, 2 ஆவது வாய்ப்பில் கோலடித்தது. மறுபுறம், முதல் வாய்ப்பில் கோலடித்த வில்லாரியல், 2 ஆவது வாய்ப்பில் கோல் வாய்ப்பை தவறவிட்டது. ஆனால் அடுத்த 4 முயற்சிகளிலும் இரு அணிகளுமே வரிசையாக கோலடிக்க, 5-5 என்ற நிலை நீடித்தது. இறுதியாக, 7ஆவது முயற்சியில் செல்சி கோலடிக்க, வில்லாரியல் முயற்சி வீணானது. இதனால் செல்சி 6-5 என்ற கணக்கில் வென்றது.

வில்லாரியல் வீரர் ஜெரார்ட் மொரினோ இந்த ஆட்டத்தில் அடித்த கோல், அணிக்காக அவர் அடித்த 83 ஆவது கோலாகும். இதன்மூலம் வில்லாரியல் அணிக்காக அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். முன்னதாக அவரும், கியுசெப்பெ ரோசியும் 82 கோல்கள் அடித்ததே அதிகபட்சமாக இருந்தது. தற்போது ரோசியையும் கடந்து அவா புதிய மைல் கல்லை எட்டியுள்ளாா



# பாகிஸ்தான் - இங்கிலாந்து ரி-20 தொடர் போட்டித் திகதிகள் உறுதிப்படுத்தப்பட்டன

பாகிஸ்தானில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ள ரி-20 கிரிக்கெட் தொடரின் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன்பு பாகிஸ்தானில் இரு போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது.

16 வருடங்கள் கழித்து பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்கிற இங்கிலாந்து கிரிக்கெட் அணி, அடுத்த வருடமும் அங்கு சென்று டெஸ்ட் தொடரில் விளையாடவிருக்கிறது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதும் ரி-20 போட்டிகள் இரண்டும் ஒக்டோபர் 13, 14 திகதிகளில் ராவல் பிண்டியில் நடைபெறவுள்ளன. இதன் பின்னர் இரு அணிகளும் ரி-20 உலகக் கிண்ணத்தொடரில்விளையாடுவதற்காக டுபாய்க்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளன.

ஆடவர் அணியுடன் சேர்ந்து இங்கிலாந்து மகளிர் அணியும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து இரு ரி-20 போட்டிகளிலும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் பங்கேற்கவிருக்கிறது.

# இங்கிலாந்துடனான 2ஆவது டெஸ்ட் இந்தியா 300 ஓட்டங்களைக் கடந்தது

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி, 3 விக்கெட்டுகளை இழந்து இழப்புக்கு 276 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டநேர முடிவில் கே.எல். ராகுல் 127 ஓட்டங்களுடனும் அஜிங்கியா ரஹானே ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இந்திய அணியின் சார்பில், ரோஹித் சர்மா 83 ஓட்டங்களுடனும் புஜாரா 9 ஓட்டங்களுடனும் விராட் கோலி 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இன்று போட்டி ஆரம்பித்ததும் விரைவாக சில விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 300 ஓட்டங்களைக் கடந்து துடுப்பெடுத்தாடி வருகிறது. ரஹானே ஒரு ஓட்டத்துடனேயே வெளியேற, கே.எல். ராகுல் 129 ஓட்டங்களோடும் ரிஷப் பண்ட் 37 ஓட்டங்களோடும் ஆட்டமிழந்தனர்.



# கரன்னாகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை நீக்கவேண்டாமென 11 பேரின் பெற்றோர் கோரிக்கை

இறுதி யுத்த காலப்பகுதியான 2008 -2009 ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்தி அச்சுறுத்தி கப்பம் பெற்ற மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை நீக்க வேண்டாமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த 11 பேரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழு சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

13 வருட விசாரணையின் பின்னர், பிரதம நீதியரசரின் ஆலோசனைக்கு அமைய, மூன்று பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் குற்றப்பத்திரிகை மீதான விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், குற்றச்சாட்டுகளை விரைவாக மீளப் பெறுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாராபட்சம் காட்டப்படுவதோடு, இது ஓர் அநீதியான செயல் எனவும், கடத்தப்பட்டு காணாமல்போன 11 பேரின் பெற்றோர் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்னவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

667 குற்றச்சாட்டுகள், 126 சாட்சிகள் மற்றும் 64 வழக்குக் கோப்புகளுடன், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த குமார ஜயதேவ கரன்னகொடவிற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கைத் தொடர்ந்து கொண்டு நடத்த முடியாது என சட்டமா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

சம்பா ஜானகி ராஜரத்ன, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க உள்ளிட்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஜனக பண்டார இதனைத் தெரிவித்தார்.

கஸ்தூரி ஆராச்சிலாகே ஜோன் ரீட், அந்தனி கஸ்தூரி ஆராச்சி, ராஜீவ் நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், மொஹமட்சஜித்,திலகேஸ்வரம்ராமலிங்கம், ஜமால்டின் டிலான், அமலன் லியோன், ரோன் லியோன், கனகராஜா ஜெகன் மற்றும் மொஹமட் அலி அன்வர் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட இளைஞர்களை விடுவிக்க கடற்படை அதிகாரிகள் அவர்களது பெற்றோரிடம் கப்பம் பெற்றமை விசாரணையில் தெரியவந்தது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்களுக்கு அமைய கடத்தப்பட்டவர்களில் பலர் கொழும்பிலும் ஏனையவர்கள் கடற்படையின் திருகோணமலை கன்சைட் முகாமிலும் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளாக இருந்த லெப்டினன் கமாண்டர் சம்பத் முனசிங்க, கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான லெப்டினன் கமாண்டர் டீ.கே.பி. தஸநாயக்க, புலனாய்வுப்பிரிவுகமாண்டர்சுமித் ரணசிங்க, கடற்படை கப்டன் லக்ஷ்மன் உதயகுமாரமற்றும் புலனாய்வு அதிகாரிகளான லலித் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிட இஹலகெதர தர்மதாஸ, ராஜபக்ஷ பத்திரணலாகே கித்சிறி, கஸ்தூரிகே காமினி, முத்துவா ஹென்நெதி அருண துஷார மெண்டிஸ் மற்றும் முன்னாள் லெப்டினன் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி மற்றும் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

'13 வருடங்களாக பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்த நாம் இந்த 14 குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டு நியாயம் நிலைநாட்டப்படும் என நம்புகிறோம்' எனக்கூறியுள்ளகாணாமல் ஆக்கப்பட்ட 11 பேரின் பெற்றோர்கள், இந்த விடயம் இயற்கையின் கோட்பாடுகளுக்கும் நீதிக்கும் எதிரானது என்பதால், ஆதரவற்ற பாதிக்கப்பட்ட பெற்றோருக்காக, வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை மீளப் பெறுவதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபர்சஞ்சய்ராஜரட்னவிடம்கேட்டுக்கொண்டுள்ளனர்.

மூன்று பேரின் தாய்மார் தமது பிள்ளைகளை இழந்த நிலையில், உயிரிழுந்துள்ளனர் எனச் சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதியை கைது செய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவு ஒருமுறை முயற்சித்த நிலையில், தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த நீதிபதிகளான புவனேக அலுவிகார, விஜித் கே.மலல்கொட மற்றும் ப்ரீத்தி பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதிமன்றம், அவரை கைது செய்வதைத் தடுக்கும் தடை உத்தரவு பிறப்பித்ததாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வசந்த கரன்னாகொட சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, தன்னுடைய வாடிக்கையாளர் பதவியில் இருந்த காலத்தில் யுத்தத்தின் வெற்றிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கியதாக சுட்டிக் காட்டினார்.

குற்றம் சாட்டப்பட்ட கரன்னாகொட மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை எனக் குறிப்பிட்ட சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஐக்கிய நாடுகள் சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சில அரசியல்வாதிகள் மீது குற்றம் சாட்டியதோடு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியனவும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

போரின் போது, தனது வாடிக்கையாளர் விரும்பிய ஒருவரை அவர் கடத்தவோ அல்லது கொலை செய்யவோ வாய்ப்புள்ளது எனவும், அந்த நாள்களில் போர் வலயத்தில் அந்த போர் வீரர்களிடம் யாரும் கேள்வி கேட்கவில்லை எனவும், எனினும் இன்றைய சூழ்நிலையில் எவரும் அவ்வாறு செய்ய முடியாது எனவும், குற்றவியல் குற்றச்சாட்டுகளில் 'போர் வீரன்' கைது செய்யப்படுவதை 'தேசத்துக்கு எதிரான குற்றம்' என உச்ச நீதிமன்றம் கருத வேண்டுமெனவும் சட்டத்தரணி வலியுறுத்தியிருந்தார்.

உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட குழாம், முன்னாள் கடற்படைத் தளபதி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தனது ஆட்சேபனைகளை எவ்வித தடையும் இன்றி முன்வைக்க அனுமதித்ததோடு, முன்னாள் கடற்படை தளபதியை கைதுசெய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பித்ததோடு, அது இறுதி உத்தரவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏகமனதாக தீர்ப்பை அறிவித்த மூன்று நீதிபதிகள் கொண்ட குழு, மனுதாரரான முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா அளித்த சமர்ப்பிப்புகளையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் போது இடம் பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

எனினும் வசந்த கரன்னாகொட உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து தப்பிக்க அவசரமாக அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக, குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையானதாகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 11 பேரின் பெற்றோர் குற்றஞ்சாட்டியிருந்தனர். முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னாகொட தமது பிள்ளைகளை கடத்தி கொலை செய்தமைத் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அதனை மூடிமறைக்க முயன்றனர் என அவர்கள் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதிவாதியான கரன்னாகொட சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, மனு மீதான விசாரணை நிறைவு பெறும் வரை, அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என்ற உத்தரவை பெற்றுள்ளார்.

இந்த மேன்முறையீட்டு மனு எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அன்றைய தினத்தில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாகவும்அரசசிரேஷ்டசட்டத்தரணி ஜனக்க பண்டார தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸில் இலங்கையைச் சேர்ந்த தாயும் மகளும் குரூரமாகக் கொலை

## அதிர்ச்சியில் புலம்பெயர் தமிழர்கள்

கொரோனா பெருந்தொற்றின் பின்னணியில் பிரான்ஸில் புலம்பெயர் இலங்கை குடும்பம் ஒன்றில் குரூரமான படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

பரிஸ் புறநகர பகுதியான வால்துஒஸ் பிராந்தியத்தில் 52 வயதான மனைவியும் 21 வயதான மகளும் கழுத்துகள் அறுக்கப்பட்டும் குத்தப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பரிஸின் முன்னணி ஊடகங்களில் பிரதான செய்தியாக இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் புலம்பெயர் இலங்கை குடும்பங்களில் இடம்பெற்ற இன்னொரு குரூர கொலையாகப் பதிவாகியுள்ளது.

பரிஸில் இருந்து வடமேற்கே சுமார் முப்பது கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வால்துஒஸ் பிராந்தியத்தின் செந்துவான் லமேன் பகுதியில் இந்த இரட்டைக்கொலை இடம்பெற்றுள்ளது.

இரவுநேர பணிமுடித்து காலை 10 மணியளவில் வீடுதிரும்பிய இலங்கை பூர்வீகத்தைக் கொண்ட குடும்பத் தலைவர் தனது 52 வயதான மனைவியும் 21வயதான மகளும் அவர்களது படுக்கை அறையில் கழுத்துகள் அறுக் கப்பட்டும் குத்தப்பட்ட காயங்களுடன் உடலங்களாகக் கிடந்ததைக் கண்டதையடுத்து இந்த குரூரசம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது.

உடனடியான பொலிஸார் உட்பட்ட அவசரகால பணியாளர்கள் அழைக்கப்பட்டு அந்தப்பகுதி பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது.

பொலிஸின் தடயவியல் பிரிவு நடத்திய தேடுதல்களில் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஒரு கூரிய ஒரு கத்தி அந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

இந்த குரூர சம்பவத்திலும் கொலையாளி இந்த குடும்பத்துக்குள் இருப்பதற்கான சாத்தியங்களை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இந்தக் கட்டத்தில் இது தொடர்பான திடமான அனுமானங்களை வெளியிடுவதற்கு பொலிஸார் விரும்பவில்லை.

குறித்த வீட்டில் இருந்து கொல்லப்பட்டவரின் இரண்டு மகன்கள் பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஆடைகளில் இரத்தம் தோய்ந்த நிலையில் இருந்தார் எனவும் இந்தச் சம்பவம் நடந்தபோது வீட்டில் இருக்காத மற்ற மகன் கடும் அதிர்ச்சியிலும் இருந்தார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை துன்பியலுக்கு உள்ளான இந்த குடும்பம் இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் சமூகநல உதவிகளை வழங்கும் எம்மாஸ் அமைப்பின் வதிவிடங்கள் அமைந்துள்ள இந்த வளாகத்தில் குடிபெயர்ந்ததாக கூறப்படுகிறது.

தற்போது வெர்செயில் பிராந்திய நீதித்துறை இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்க உத்தரவிட்டதையடுத்து வேண்டுமென்றே செய்யப்படும் படுகொலைக்குரிய வகைப்படுத்தல் பிரிவின் கீழ் பொந்துவாஸ் அரசு வழக்குதொடுநர் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த குரூர கொலைகளுக்குரிய துல்லியமான காரணங்கள் இனிமேல்தான் தெரியவரும் என்றபோதிலும் இந்தச் சம்பவம் பிரான்ஸ்வாழ் இலங்கையர்களையும் புலம்பெயர் இலங்கை மக்களையும் மீண்டும் ஒருமுறை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.08.2021இல் வெளியிடப்பெற்றது.